P.L.RAJ IAS & IPS ACADEMY

Building Bureaucrats Since 2006

November 14, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. உலக அளவில் அவுட்லுக், டீம்ஸ் போன்ற மைக்ரோசாஃப்ட் 365 தகவல் பரிமாற்றச் சேவைகளில் வியாழக்கிழமை இரவு ஏற்பட்ட முடக்கம், வெள்ளிக்கிழமையும் 2-ஆவது நாளாக நீடித்தது.
   i. இதனால், உலகெங்கிலும் உள்ள பயனர்கள், தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் சில அரசு அமைப்புகளின் அன்றாடப் பணிகள் பாதிக்கப்பட்டன.
   ii. உலக அளவில் 43 கோடிக்கும் அதிகமானோர் 'மைக்ரோசாஃப்ட் 365' செயலிகளைப் பயன்படுத்தி வருகின்றனர். இந்நிலையில் வியாழக்கிழமையன்று, இச்சேவைகளை அணுகுவதில் சிரமம் எழுந்தது. இதையடுத்து, அவுட்லுக், டீம்ஸ் மற்றும் ஏ.ஐ. உதவியாளரான கோபைலட் உள்ளிட்ட சேவைகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக மைக்ரோசாஃப்ட் நிறுவனம் உறுதிப்படுத்தியது.
   iii. இந்த முடக்கத்துக்கு இணையவழித் தாக்குதல் போன்ற எந்தவொரு தீங்கிழைக்கும் செயல்களும் காரணமல்ல என்றும், சில சர்வர்கள் எதிர்பாராத வகையில் செயலிழந்ததே முடக்கத்துக்குக் காரணம் என்றும் மைக்ரோசாஃப்ட் நிறுவன துணைத் தலைவர் சார்லஸ் லமன்னா தெளிவுபடுத்தியுள்ளார்.

2. தேசிய விளையாட்டு வாரியத்தின் (என்எஸ்பி) தலைவராக, ஓய்வுபெற்ற இந்திய ஆட்சிப் பணி (ஐஏஎஸ்) அதிகாரி தேவேஷ் சதுர்வேதி (60) நியமிக்கப்பட்டார்.
   i. வாரியத்தின் உறுப்பினராக, ஒலிம்பிக் பதக்க வாய்ப்புள்ளோருக்கு தேவையான ஆதரவை நிர்வகித்து வந்த 'டாப்ஸ்' அமைப்பின் தலைமைச் செயல் அதிகாரி பி.கே.கர்க் நியமிக்கப்பட்டுள்ளார். 3-ஆவது உறுப்பினர் நியமனம் பின்னர் மேற்கொள்ளப்படும் எனத்தெரிகிறது.
   ii. அமைச்சரவைச் செயலர் டி.வி.சோமநாதன் தலைமையிலான தேடுதல் மற்றும் தேர்வுக் குழு, இவர்களின் பெயர்களை இறுதி செய்துள்ளது. இருவரும் 3 ஆண்டுகள் இந்தப் பொறுப்பில் இருப்பர்.
   iii. தேசிய விளையாட்டு சம்மேளனங்களுக்கான அங்கீகாரத்தை வழங்கும், ரத்து செய்யும் அதிகாரம் படைத்த தேசிய விளையாட்டு வாரியம்,

விளையாட்டு நிர்வாகம் தொடர்பாக சர்வதேச அமைப்புகளுடனும் கூட்டாக செயல்படும்.

3. 2025-ஆம் ஆண்டுக்காக அறிவிக்கப்பட்ட தேசிய விளையாட்டு விருதுகளை, உரிய வீரர், வீராங்கனைகளுக்கு வழங்கி குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு கௌரவித்தார்.

i. அர்ஜுனா விருது:
தேஜஸ் வின் சங்கர், முகமது அஜ்மல், பிரியங்கா கோஸ்வாமி (தடகளம்) ராஜ்குமார் பால், லால்ரெம்சியாமி (ஹாக்கி), சுர்ஜீத், பூஜா (கபடி), திவ்யா தேஷ்முக், விதித் குஜராத்தி (செஸ்), டிரீசா ஜாலி, காயத்ரி கோபிசந்த் (பாட்மின்டன்), நரேந்தர் பர்வால் (குத்துச்சண்டை), தனுஷ் ஸ்ரீகாந்த் (செவித்திறன் மாற்றுத்திறனாளி துப்பாக்கி சுடுதல்), ருத்ரான்ஷ் கந்தெல்வால் (பாரா துப்பாக்கி சுடுதல்), ஏக்தா அபியான் (பாரா தடகளம்), அரவிந்த் சிங் (ரோயிங்), அகில் சோரன் (துப் பாக்கி சுடுதல்).

ii. அர்ஜுனா விருது (வாழ்நாள் சாதனையாளர்):
ஐ.அருமைநாய கம் (கால்பந்து)

iii. துரோணாச்சார்யா விருது:
பர்வீர் சிங் (தடகளம்), சோட் லால் யாதவ் (குத்துச்சண்டை), நேஹா சவான் (துப்பாக்கி சுடுதல்).

iv. துரோணாச்சார்யா விருது (வாழ்நாள் சாதனையாளர்):
தர்மேந்திர யாதவ் (குத்துச்சண்டை), வீரேந்தர் குமார் (மல்யுத்தம்).

4. தென் கிழக்கு ஆசிய நாடுகள் பல பிரமோஸ் ஏவுகணை வாங்குவதற்கு ஆர்வம் காட்டியுள்ளன என்று பிரமோஸ் ஏரோஸ்பேஸ் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரியும் நிர்வாக இயக்குநருமான ஜெய்தீர்த் ஆர். ஜோஷி தெரிவித்தார்.

i. பிலிப்பின்ஸுக்கு பிரமோஸ் ஏவுகணைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன; வியத்நாமுடன் ஒப்பந்தம் கையொப்பமாகியுள்ளது; தென்கிழக்கு ஆசிய நாடுகள் பல பிரமோஸ் ஏவுகணை வாங்குவதற்கு ஆர்வம் காட்டியுள்ளன.

5. இந்தியாவில் ஆன்மிகமும் இணைந்து செயல்படுகின்றன; வானியற்பியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் இந்திய இளைஞர்கள்

குறிப்பிடத்தக்க சாதனைகளை படைத்து வருகின்றனர் என்று பிரதமர் மோடி தெரிவித்தார்.

i. மைசூரில் மைசூரு பல்கலைக்கழக வளாகத்தில் சாமுண்டி மலையடிவாரத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்தியாவின் முதல் எல்.இ.டி.திரை அமைந்த நவீன கோளரங்கத்தை திறந்துவைத்தார்.

6. கடந்த 2015-ஆம் ஆண்டை ஒப்பிடுகையில், இந்தியாவில் தற்போது காசநோய் உயிரிழப்புகளின் எண்ணிக்கை குறிப்பிடத் தக்க அளவில் குறைந்துள்ளதாக உலக சுகாதார அமைப்பின் (டபிள்யுஹெச்ஓ) அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

i. உலக சுகாதார அமைப்பின் உலகளாவிய காசநோய் அறிக்கை-2026 வியாழக்கிழமை வெளியிடப்பட்டது. அதில், 'இந்தியாவில் கடந்த 2015-இல் காசநோய் உயிரிழப்பு லட்சத்தில் 28 பேர் என்ற அளவில் இருந்தது. இது, 2025-இல் லட்சத்தில் 18 பேர் என்ற அளவில் கணிசமாக குறைந்துள்ளது.

ii. அதாவது, காசநோய் உயிரிழப்பில் 38 சதவீத குறைவை இந்தியா பதிவு செய்துள்ளது. உலக அளவில் காசநோய் உயிரிழப்பில் ஏற்பட்டுள்ள குறைவைவிட (35%) இது அதிகம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'விரைவாக நோய் கண்டறிதல், உரிய நேரத்தில் சிகிச்சை, செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) அடிப்படையிலான எக்ஸ் ரே, பிற தொழில்நுட்ப புத்தாக்கங்கள், விரிவான மருத்துவ பராமரிப்பு, ஊட்டச்சத்து ஆதரவு உள்ளிட்ட நடவடிக்கைகளின் வாயிலாக காசநோய் இல்லாத தேசத்தை உருவாக்குவதில் இந்தியா முன்னேற்றம் கண்டுள்ளது.

iii. தேசிய காசநோய் ஒழிப்பு திட்டத் தின்கீழ் பல்வேறு வெற்றிகர முன்னெடுப்புகளின் பிரதிபலிப்பே இந்த முன்னேற்றமாகும். காசநோய் சிகிச்சையில் 94 சதவீத வெற்றி விகிதத்தை இந்தியா பதிவு செய்துள்ளது. இது, நோயாளிகளை மையப்படுத்திய திறன்மிக்க அணுகுமுறை, வலுவான சிகிச்சை கட்டமைப்பு மற்றும் அரசின் நிலையான ஆதரவுக்கு கிடைத்த பலனாகும்.

iv. பிரதமர் மோடியின் தலைமையின் கீழ்காசநோய்க்கு எதிரான போராட்டம் மக்கள் இயக்கமாக உருவெடுத்துள்ளது. நாட்டில் கடந்த 2024 முதல் இதுவரை 25 கோடி தனிநபர்கள் காசநோய் பரிசோதனை வரம்பில்

கொண்டுவரப்பட்டு, சுமார் 11 கோடி பேருக்கு மார்பக எக்ஸ் ரே மேற்கொள்ளப்பட்டது.

v. இதன் மூலம் 48.64 லட்சம் பேருக்கு காசநோய் பாதிப்பு கண்டறியப்பட்டு, சிகிச்சை தொடங்கப்பட்டது' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

vi. மத்திய அரசின் தீவிர நடவடிக்கை களால்காசநோய் ஒழிப்பில் இந்தியா குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டியுள்ளதாக, மத்திய சுகாதார அமைச்சர் ஜெ.பி.நட்டா பெருமிதம் தெரிவித்துள்ளார்.

7. வங்கக் கடலில் நவ.16-ஆம் தேதி 'அக்வான்' புயல் உருவாக வாய்ப்புள்ளதாகவும், இதுவும் முந்தைய புயல்கள் போல ஆந்திரத்தை நோக்கி நகர வாய்ப்பு உள்ளதாகவும் வானிலை ஆய்வு மைய தென்மண்டல தலைவர் வி.ஆர்.துரை தெரிவித்தார்.

i. தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழை கடந்த அக்.15-ஆம் தேதி தொடங்கியது. இதையடுத்து, கடந்த காலங்களில் இல்லாதது போன்று தொடர்ந்து அடுத்தடுத்து புயல்கள் உருவான வண்ணம் உள்ளன.

ii. இந்திய பெருங்கடலின் வடக்குப் பகுதியில், வங்கக் கடல் மற்றும் அரபிக் கடலில் உருவாகும் புயல்களுக்கு இந்தியா, வங்கதேசம், ஈரான், பாகிஸ்தான், இலங்கை உள்பட 13 நாடுகள் இணைந்து உருவாக்கிய பெயர்ப் பட்டியலிலிருந்து பெயர் சூட்டப்படும். ஒவ்வொரு நாடும் பரிந்துரைத்த பெயர்கள் வரிசைப்படி பயன்படுத்தப்படுகின்றன. இந்த வகையில் வங்கக் கடலில் ஏற்கெனவே உருவான இரு புயல்களுக்கு வங்கதேசம் சார்பில் பரிந்துரை செய்யப்பட்ட 'அர்னாப்'. இந்தியா சார்பில் பரிந்துரை செய்யப்பட்ட 'முரசு' ஆகிய பெயர்கள் சூட்டப்பட்டன. அதையடுத்து 3-ஆவதாக உருவாகவுள்ள புயலுக்கு ஈரான் பரிந்துரைத்த 'அக்வான்' என்ற பெயர் சூட்டப்படும். இதற்கு, பாரசீக மொழியில் 'அசுரன்' அல்லது 'தீய சக்தி' எனப் பொருளாகும்.

8. சரியான நேரத்தில், சரியான முடிவு

(i) 2026–27 ராபி பருவத்திற்கான உர மானிய ஒதுக்கீடு

- 2026–27 ராபி பருவத்திற்கான பாஸ்பேட் மற்றும் பொட்டாசியம் (P&K) உரங்களுக்கான மானியமாக ₹62,370 கோடி ஒதுக்கீடு செய்ய மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

- முந்தைய காரீஃப் பருவத்திற்காக ஒதுக்கப்பட்ட ₹41,533.81 கோடியுடன் ஒப்பிடுகையில், இந்த ஒதுக்கீடு சுமார் 50% அதிகமாகும்.
- முந்தைய ராபி பருவத்தில் ஒதுக்கப்பட்ட ₹37,952 கோடியைவிட தற்போது கூடுதலாக ₹24,417.73 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

(ii) பட்ஜெட் தாக்கம் மற்றும் ஒட்டுமொத்த நிதிச்சுமை

- நடப்பு நிதியாண்டில் P&K உரங்களுக்கான மொத்த மானிய ஒதுக்கீடு ₹1 லட்சம் கோடியைத் தாண்டியுள்ளது. இது ஆரம்பகட்ட பட்ஜெட் மதிப்பீடான ₹54,000 கோடியைவிட ஏறத்தாழ இரு மடங்காகும்.
- 2026–27 நிதியாண்டிற்காக ஒதுக்கப்பட்ட மொத்த உர மானிய நிதியான ₹1.71 லட்சம் கோடியைத் தாண்டி கூடுதல் நிதி ஒதுக்க வேண்டிய நிலை தவிர்க்க முடியாததாகியுள்ளது.

(iii) புவிசார் அரசியல் மோதல்கள் மற்றும் சர்வதேச விலை உயர்வு

- மத்திய பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்ட ஒரு மாதத்திற்குப் பிறகு, ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களைத் தொடர்ந்து, ஹோர்முஸ் நீரிணையை ஈரான் மூடியது.
- இதனால் கடல்வழிப் போக்குவரத்து முடங்கியதால், மேற்கு ஆசிய நாடுகளிலிருந்து பெட்ரோலியப் பொருள்கள், ரசாயன உரங்கள் மற்றும் மூலப்பொருள்கள் ஏற்றுமதி தடைப்பட்டது.
- மேற்கு ஆசியாவில் நிலவும் மோதல்கள், ரஷியா–உக்ரைன் போர் மற்றும் தொடர்ச்சியான புவிசார் அரசியல் பதற்றங்கள் காரணமாக விநியோகப் பற்றாக்குறை ஏற்பட்டு, சர்வதேச உரங்களின் விலைகள் கடுமையாக உயர்ந்தன.

(iv) இந்தியாவின் உர இறக்குமதிச் சார்பு

- இந்தியாவின் டை-அமோனியம் பாஸ்பேட் (DAP) உரத் தேவையில் 90% மேற்கு ஆசிய மற்றும் வட அமெரிக்க நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது.
- பொட்டாஷ் (MOP) உரம் பெரும்பாலும் ரஷியா மற்றும் பெலாரஸ் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது.
- இந்த உரங்களை உள்நாட்டில் உற்பத்தி செய்வதற்குத் தேவையான மூலப்பொருள்கள் போதுமான அளவில் கிடைக்காததால், இந்தியா இறக்குமதியைப் பெரிதும் சார்ந்துள்ளது.

(v) திருத்தப்பட்ட ஊட்டச்சத்து அடிப்படையிலான மானிய விகிதங்கள் மற்றும்

சில்லறை விலைகள்

ஒரு கிலோவுக்கான திருத்தப்பட்ட மானிய விகிதங்கள்:

- நைட்ரஜன் (N): ₹94.21
- பாஸ்பரஸ் (P): ₹66.11
- கந்தகம் (S): ₹10.42
- பொட்டாசியம் (K): ₹2.38

DAP உர மூட்டையின் சில்லறை விலை:

- திருத்தப்பட்ட மானிய விகிதங்களின் மூலம் 50 கிலோ எடையுள்ள DAP உர மூட்டையை விவசாயிகள் ₹1,350 என்ற மானிய விலையில் தொடர்ந்து பெறுவதை உறுதி செய்யப்பட்டுள்ளது.

(vi) தேசிய அளவிலான உர இருப்பு நிலவரம் (நவம்பர் 30 நிலவரப்படி)

நாட்டில் உரங்களின் இருப்பு போதுமான அளவில் உள்ளதாக மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் உறுதிப்படுத்தியுள்ளார்.

- யூரியா: 103.12 லட்சம் டன்கள்
- DAP: 28.65 லட்சம் டன்கள்
- NPK: 60.87 லட்சம் டன்கள்
- MOP: 20.08 லட்சம் டன்கள்
- SSP: 22.49 லட்சம் டன்கள்

(vii) உணவுப் பாதுகாப்பு மற்றும் நெருக்கடி மேலாண்மை

- உலகிலேயே அதிக மக்கள்தொகை கொண்ட நாடாக இந்தியா இருப்பதால், பயிர் இழப்பு, உணவுப் பற்றாக்குறை அல்லது சமூக அமைதியின்மை ஏற்படுவதைத் தடுப்பதற்கு விவசாயிகளுக்கு உரங்களின் தடையற்ற விநியோகத்தை உறுதி செய்வது மிகவும் அவசியமாக இருந்தது.
- வளர்ந்த நாடுகள் எரிபொருள் மற்றும் உணவுப் பற்றாக்குறையால் சிரமங்களை எதிர்கொண்ட நிலையில், இந்தியா உர விநியோகத்தில் தடைகள் ஏற்படாமல் தடுத்து, சர்வதேச விலை உயர்வின் தாக்கத்திலிருந்து விவசாயிகளைப் பாதுகாத்தது.

(viii) களநிலைச் சவால்கள் மற்றும் கொள்கைப் பரிந்துரைகள்

- நடைமுறையில், விநியோகஸ்தர்கள் செயற்கையான தட்டுப்பாட்டை உருவாக்குவதால், விவசாயிகள் ஒவ்வொரு உர மூட்டைக்கும் ₹50 முதல் ₹100 வரை கூடுதல் விலை கொடுக்க வேண்டிய நிலை அடிக்கடி ஏற்படுகிறது.

மேலும், சில நேரங்களில் தங்களுக்குத் தேவையில்லாத துணை இடுபொருள்களையும் கட்டாயமாக வாங்க வேண்டிய சூழலுக்குத் தள்ளப்படுகின்றனர்.

- விநியோகச் சங்கிலிகளை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து, செயற்கையான தட்டுப்பாட்டை உருவாக்கும் பதுக்கல்காரர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- கள்ளச்சந்தை விற்பனை மற்றும் விலை உயர்வைத் தடுக்க, தொழிற்சாலைகளில் உர உற்பத்தி, உரங்களைச் சரியான நேரத்தில் சந்தைக்கு வெளியிடுதல் மற்றும் கிராமப்புற விநியோக வலைப்பின்னல்கள் ஆகிய அனைத்துக் கட்டங்களிலும் தொடர்ச்சியான கண்காணிப்பு அவசியமாகும்.